சுருக்கம்

வனம் – திண்டுக்கல் மண்டலம், கரூர் வனக்கோட்டம் – 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தேக்கு மரங்களை அப்புறப்படுத்த – 2021–22–ஆம் நிதியாண்டிற்கு ரூ.10.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்–வனத் (வனம்.4) துறை

அரசாணை (டி) எண்.184

நாள். 22.12.2021
திருவள்ளுவர் ஆண்டு– 2052
பிலவ, மார்கழி – 07

படிக்க:

1. அரசாணை (டி) எண்.71, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.4) துறை, நாள். 22.02.2021.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்) கடித எண். உ2/9252/2010, நாள். 26.02.2021.

----------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், திண்டுக்கல் மண்டலம், கரூர் வனக்கோட்டத்தில் கட்டளை மேட்டு வாய்க்கால் பகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தேக்கு மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு ரூ.137.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடிதத்தில், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ. 137.24/– இலட்சத்தில், 2020–2021–ம் நிதியாண்டில் ரூ.1.45/– இலட்சம் மட்டும் செலவிடப்பட்டுள்ளது என்றும், COVID–19 பெருந்தொற்றினால் ஏற்பட்ட முடக்கம் காரணமாக அறுவடை பணி முடிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இந்நிகழ்வில், 2020–2021–ம் நிதியாண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட நிதியில் செலவிடப்படாத தொகையான ரூ.135.79 இலட்சத்தினை நடப்பு நிதியாண்டில் (2021–22) பயன்படுத்தி அறுவடை பணிகளை மேற்கொள்ள உரிய நிதி ஒதுக்கீட்டு பேரேடு எண்ணுடன் (ASL) நிதி ஒதுக்கீட்டினை மறு செல்லுபடியாக்கம் (Revalidation Order) செய்து அரசு நிலையில் உரிய ஆணையினை தொடர்புடைய தலைப்பின் கீழ் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்காணும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கோரிக்கையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அரசாணை (டி) எண்.71, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.4) துறை, நாள். 22.02.2021 ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் ஒரு பகுதி செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மறு செல்லுபடியாக்கம் செய்யும் நிலை எழாது. எனவே, கரூர் வனக்கோட்டத்தில் 30 வருடங்கள் முதிர்ந்த தேக்குமரங்களை அப்புறப்படுத்துவதற்கு, அரசால் ஏற்கனவே நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு செலவு செய்யப்படாத தொகையான ரூ.135.79 இலட்சத்தில் 2021–2022–ம் நிதியாண்டு முடிவடைய இன்னும் சில

மாதங்களே உள்ள நிலையில் முதற்கண் ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது. 2021-22-ம் நிதியாண்டில் கூடுதலாக நிதி ஒப்பளிப்பு தேவைப்படும் பொழுது உரிய கருத்துருவை அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2406 - காடு வளர்ப்பும் வன விலங்கும் - 01 காடு வளர்ப்பு - 105 காடுபடுபொருள் - மாநிலச் செலவினங்கள் - AC - அரசு முகவரமைப்பு மூலம் வெட்டு மரம் எடுத்துச் செல்லுதல் - 302 ஊதியங்கள் - 01 ஊதியங்கள்"

த.தொ.கு.- (2406 - 01 -105- AC- 30201)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.10,00,000/-ம் 2021-2022-ஆம் நிதியாண்டுக்கான திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும், இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2021-2022 ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடு/மறு திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை தவறாது நிதி (கா.ப.பா (ம) மீ.வ/அ.செ.பொ.-1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 53877/21, நாள் 18.12.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான நிதியொதுக்கப் பேரேடு எண். 1203 (ஆயிரத்து இருநூற்று மூன்று).

//ஆளுநரின் ஆணைப்படி//

சுப்ரியா ஸாஹூ
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
(துறைத் தலைவர்),
சென்னை-15.
(அரசாணை எண் மற்றும் தேதியினை IFHRMS தளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது)
மாவட்ட வன அலுவலர்,
கரூர் வனக் கோட்டம், கரூர்.
தலைமை வனப்பாதுகாவலர்,
திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்-4.
(முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் வழியாக)

மாநில கணக்காயர், சென்னை–18/35.

<u>நகல்</u>

மாண்புமிகு அமைச்சர் (வனம்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–09.
நிதித்(கா.ப.பா.(ம)மீ.வ./வ.செ.பொ.1/ வ.செ.பொ.2/வ.வ.1) துறை,
சென்னை–09.
முதன்மைச்செயலாளர் அவர்களின் தனிச்செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் – வனத்துறை,
சென்னை–09.
இருப்புக்கோப்பு/ உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

24/12/2021.